துடுப்பதி கிராமத்தில் உயர்நிலைப்பள்ளி

*462 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த துடுப்பதி கிராமத்தில் உயர்நிலைப்பள்ளி ஒன்று துவங்க ரூ. 10,000 பொதுமக்களால் அரசாங்கத்திற்குக் கட்டப்பட்டும், அரசாங்கம் இதற்கான அனுமதி அளிக்காமல் இருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை. 1974–75-ஆம் கல்வி ஆண்டில் துடுப்பதி கிராமத்தில் 6 முதல் 9 வகுப்புகள் கொண்ட ஓர் அரசினர் உயர்நிலைப் பள்ளியைத் துவக்க அனுமதி அளிக்கப்பட்டது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சித. சிதம்பரம் : தலைவரவர்களே, காரைக்குடி வட்டத்தில் பொது மக்களால் பத்தாயிரம் ரூபாய் பணம் அளிக்கப்படுமானால் புதிய உயர்நிலைப் பள்ளிகள் தொடங்க அனுமதி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பல்வேறு பள்ளிகள் திறக்கப்பட்டு வருகின்றன. இதில் அதற்கான நிர்ப்பந்தங்களை யெல்லாம் ஆராய்ந்து அந்தப் பகுதியில் உள்ள பள்ளிகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பள்ளிகள் இல்லாத பகுதிகளில் புதிதாகப் பள்ளிகளை ஆரம்பிப்பதற்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. இது பற்றி பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆராயப்பட்டு வருகிறது.

திரு. என். கே. பழனிச்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு, மூன்று வருஷங்களுக்கு முன்பு இதை ஆரம்பித்து வைத்தார்கள். ஆனால் இதுவரையிலும் அதற்கான நிதி ஒதுக்கவில்லை. ஆகவே இந்த வருஷமாவது சர்க்கார் இதற்கான ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எந்தெந்த மாவட்டத்தில் எந்தெந்தப் பள்ளிகளுக்கு ஒதுக்குவது என்பதை முதன்மைக் கல்வி அதிகாரி அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்கள் தேர்ந்தெடுத்த பள்ளிகளுள் துடுப்பதி பள்ளி இருக்கிறதா என்ற விபரம் இல்லை. அதை முதன்மைக் கல்வி அதிகாரியிடமிருந்துதான் அறிய வேண்டும்.

திரு. என். மருகாசலம் : என்னுடைய மாவட்டத்தில் குனியமுத்தூரில் ஒரு உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

Mr. DEPUTY SPEAKER : This does not relate to the mina question.

1975 மார்ச் 27]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, புதிதாக உயர்நிலைப் பள்ளிகளை அதிகமாகத் திறப்பதைவிட இருக்கிற பள்ளிகளில் கூடுதலாகக் கட்டிடங்கள் கட்டி, கல்வியின் தரத்தை உயர்த்த அரசு ஆலோசனை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட கருத்துக்குத்தான் முக்கியத்துவம் தரவேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த வகையில்தான் முக்கியத்துவம் தருகிறோம். ஆகவே எந்தெந்த இடங்களில் இட வசதியைப் பெருக்கியாக வேண்டுமோ அந்தந்த இடங்களில் இட வசதியைப் பெருக்கும் வகையில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, பள்ளிகள் ஆரம்பிக்கப் பப்ளிக் காண்ட்ரிபியூஷன் தேவை என்ற நிர்ப்பந்தம் இருக்கிற காரணத்தால் சில பிற்பட்ட பகுதிகளில் வசதியில்லாத மக்கள் இருக்கிற பகுதிகளில் உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்க காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் கால தாமதத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

MR. DEPUTY SPEAKER : This does not relate to the main question.

திரு. வி. பழனிவேலு : தலைவரவர்களே, ஒரு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிப்பதற்கு எவ்வளவு பணம், நிலம் தேவை? அதிகப்படியாக எத்தனை மாணவர்கள் தேவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மெயின் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

THIRU J. JAMES Point of Order, Sir.

MR, DEPUTY SPEAKER: No point of order during question hour. You raise the point of order immediately after question hour.

உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள்

*463 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றில உள்ள எந்தெந்த அரசினர் உயர் நிலைப் பள்ளிகளுக்குத் துணைக் கட்டடங்கள் அமைக்கும் செயற் குறிப்புக்கள் ஆய்வில் உள்ளன?

(இ) இவைகளைக் கட்டி முடிப்பதில் எற்படும் கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?